**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 267 /2021**

2026- ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16– ஆம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு. பா. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பச்சமுத்து | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | புதுப்பேட்டை | சமயம் | : | – |
| நாட்டினன் | : | இந்தியன் | வயது | : | 65 /2025 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. வாதி மதிவாணன் அத்தியூர் கிராம வடக்கு நத்தம் புல எண். 231/2 க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண். 131/2 க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண். 231/2 க்கு எனது தந்தை பச்சமுத்து பெயர் மற்றும் காவேரி பெயரிலும் கூட்டாக பட்டா இருந்தது என்றால் சரிதான். காவேரி அம்மாள் கூட்டு பட்டாவில் உள்ள தன் பங்கை தனது பேரப்பிள்ளைகளுக்கு தான செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது வில்லங்கம் எடுத்து பார்த்தபோதுதான் தெரியும். சர்வே எண். 231/2 ல் உள்ள இடத்தில் காவேரி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட பாகத்தை பொறுத்தும், தானசெட்டில்மென்ட் பத்திரத்தின்படியும் வாதி குடும்பத்தினர் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் ஒன்றாக இருந்தோம். அவ்வாறு ஒன்றாக இருந்தபோதுதான் அவர் தனக்கு இடைஞ்சல் செய்ததாக நீதிமன்றத்தில் வாதி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் நான் எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை. நான் எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை என்பதால் வாதி கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

2. நான் 20.01.2015 ம் தேதி குன்னம் வட்டாட்சியரிடம் சர்வே எண். 231/2 ல் காவேரி அம்மா பெயரை நீக்கம் செய்தும், சர்வே எண். 231/3 ல் எனது பெயரை சேர்க்க சொல்லியும் ஒரு மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு 05.03.2015 ம் விசாரணைக்கு வந்து என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண். 231/3 ல் உள்ள சொத்து வாதி குடும்பத்தினர் கிரயம் வாங்கிய சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 231/3 வாதி கிரயம் வாங்கிய சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றாலும், அதில் என் பெயரையும் சேர்க்க சொல்லி மனு கொடுத்தேன் என்றால், ஏற்கனவே அவர்கள் எங்கள் சொத்தில் சேர்க்க அவர்கள் மனு கொடுத்ததால் நாங்களும் மனு கொடுத்தோம்.

DMOUNT, OURT KUNNAM

சர்வே எண். 231/2 என்பது வாதிக்கு அவர்கள் அம்மா பெயரில் பூர்வீகமாக இருந்தது என்றால் எங்களுக்கும் பூர்வீகம் அவங்களுக்கும் பூர்வீகம் ஆகும்.

3. வாதி குடும்பத்திற்கும் பூர்வீகத்தின் அடிப்படையில் உரிமை உள்ளது என்றால் , எங்களுக்கு ஒரு பாகம் பூர்வீகம், இரண்டு பாகம் வாங்கியது, அவர்களுக்கு ஒரு பாகம் பூர்வீகம் ஆகும். மேற்படி நிலத்தில் கிரயம் வாங்கிய நிலத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். மேற்சொன்னவாறு எந்த வழக்கும் போடவில்லை என்றால் சரியல்ல. வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். வட்டாட்சியர் வந்து மனுவில் உள்ள இடத்தை பார்வையிட்டார். பார்வையிட்டு ஒரு உத்தரவு போட்டார், அதில் காவேரி அம்மாளுக்கும் எங்களுக்கும் கூட்டாக பாகம் உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே பூர்வீகப்படியும், பட்டாபடியும் வட்டாட்சியர் தள பார்வையிட்டு உத்தரவின்படியும் காவேரி அம்மாளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று தெரிந்திருந்தும் மேற்படி சர்வே எண்ணுக்கு உள்ள நிலத்தை வாதிகள் அனுபவம் செய்து வருவதற்கு வீண் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4. சர்வே எண். 231/2 ல் 70 வருடம் பழமை வாய்ந்த கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். வட்டாட்சியர், கோட்டாட்சியர் ஆகியோர்கள் வந்து பார்வையிட்டபோது கட்டிடம் இருந்தது என்றால் இருந்தது. வட்டாட்சியர், கோட்டாட்சியர் ஆகியோர்கள் வாதி வழக்கு போட்டபிறகுதான் வந்து பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது வட்டாட்சியர், கோட்டாட்சியர் ஆகியோர்களை அழைத்து வந்து வீண் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில், வாதி தாவா சொத்து பொறுத்து விளம்புகை பரிகாரம் தான் கேட்கமுடியும், தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்று சொல்லியுள்ளது கூட்டு பாகத்தில் இருக்கும்போது விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்றும், தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் தான் கேட்க முடியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தாவா சொத்தை இடிக்க மாட்டேன் வாதி வழக்கிற்காக இடிக்க முயற்சி செய்ததாக சொல்வது சரியல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. எதிர் வழக்குரையில் வீட்டை இடிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டு, தற்போது வீட்டை இடித்து விட்டேன் என்றால், இடிந்து விழுவதுபோல் இருந்தது, மேலும் பக்கத்து வீட்டிற்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் வீட்டை இடித்து விட்டேன். பக்கத்து வீட்டிற்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் வீட்டை இடிப்பதற்கு அனுமதி கொடுங்கள் என்று நீதிமன்றத்தில் கேட்டேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், நீதிமன்றத்தில் மனு கொடுக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் காவலர்கள் வந்தார்கள்

போட்டோ எடுத்தார்கள், சுற்றியுள்ள 20 நபர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். காவல் துறை எடுத்த நடவடிக்கை குறித்து நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மழைக்காலங்களில் வீடு முழுவதுமாக சிதிலம் அடைந்து விட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வாதியின் உரிமையை மறுத்து வீட்டை இடித்து விட்டு பொய்யான காரணங்களை கூறி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் பாக வீட்டையும் வழக்கு இ ருக்கும்போதே இடித்து விட்டதால் அதற்கு தனி பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்தை தக்க வைத்து கொள்கிறார் என்றால் சரியல்ல.

6. வாதி தனது அம்மா பெயரில் உள்ள சொத்தை தான் அனுபவம் செய்து வருகிறார், வாதி குடும்பத்தினர் அனுபவம் செய்வதை வீண் இடைஞ்சல் செய்ததால் தான் சமூகம் நீதிமன்றத்தில் தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் , வாதி கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJMCOURT, KUNNAM